
உ
சிவமயம்
கணபதி துணை



அல்வாய் மேற்கை பிறப்பிடமாகவும்,
அல்வாய் தெற்கை (மோட்டஞ்சீமா) வதிவிடமாகவும்,
தற்போது லண்டனில் வசித்தவருமாகிய

# அமரர் திருமதி. நவரத்தினம் கமலவேணி

அவர்களின்

# ஆத்ம சாந்தி நினைவு மலர்

*In Ever Loving Memory of*

**Late Mrs. Navaratnam Kamalaveni**

**01.01.2006**

# அமரர் திருமதி. நவரத்தினம் கமலவேணி அவர்கள்



தாயின் மடியில்
**27 – 02 – 1950**

தாயானவன் அடியில்
**02 – 12 – 2005**

## திதி வெண்பா

ஆண்டு பார்த்திப வருடம்
கார்த்திகை திங்கள் பதினேழாம் நாள்
புண்ணியம் சேர் வெள்ளிக்கிழமை தனில்
பூர்வ பட்ச பிரதமை திதியில்
கண்ணியம் மிக்கவராம் கமலவேணி அம்மா
சேர்ந்தார் சிவனடிதானே.

சிவமயம்

# வாழ்க்கைப் பயணம்.......

செந்தமிழீழத்தில் வடமராட்சி, அல்வாய் மேற்கு (திக்கம்) குமாரரட்ணம் முதலியார் வழித் தோன்றலில் சுகாதார அதிகாரியாக மலேசியாவில் கடமையாற்றிய கந்தவனம் நாகமணி தம்பதியினரின் இருபிள்ளைகளில் இரண்டாவது செல்லக்குழந்தைகயாக செல்வச்சந்நிதி முருகன் அருளால் 1950 ஆம் வருடம் மாசி மாதம் 27ம் நாளில் மலேசியாவில் (கோலாலம்பூர்) பிறந்தார்.

தனது குதூகலமான குழந்தைப் பருவத்தை மலேசியாவில் செல்வச் செழிப்போடு கழித்தார். தனது ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்த பின் தனது தாய் மூத்த சகோதரியுடன் இலங்கை வந்து தன் தாயாரின் அரவணைப்பில் அல்வாய் மேற்கு தாமர் வளவில் தன் வாழ்வைத் தொடர்ந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலத்திலும் பின் உயர் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையிலும் கற்றார்.

உரிய வயதில் தன் வாழ்க்கைத் துணையாக அல்வாய் தெற்கு மோட்டஞ்சீமா வீரமாப்பாணர் பரம்பரையில் வந்த பிரபல வர்த்தகர் திரு.சின்னத்துரை (A.T.S) பசுபதி தம்பதியினரின் ஆறாவது புத்திரரான நவரத்தினத்தை (சந்திரன்) காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் மணந்து கொண்டார். தனது கணவனின் ஊரையே தனது புகுந்த வீடாக எண்ணி வாழ்ந்தார்.

மிகுந்த இறை பக்தியும் மற்றோருக்கு உதவும் குணமும் தன் நம்பிக்கையும் கொண்டவருமாக ஊரார் போற்ற தன் இல்லற வாழ்வை இனிதே நடத்தி வந்தார். இவர் தன் இனிய வாழ்வின் அடையாளமாக விஜிதா, சுஜாதா, நிரஞ்சன், கவிதா, நிஷாந்தினி என்ற ஐந்து குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்தார். அன்பின் அரவணைப்பால் தன் பிள்ளைகளை உற்றாரும் ஊராரும் போற்ற பாசத்தையும்,

பண்பையும், கல்வியினையும் ஊட்டி வளர்த்தார்

இவர் அம்மன் மீது அதீத பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர். கடவுளின் அருளால் தன் முதல் நான்கு பிள்ளைகளுக்கும் உரிய வயதில் இனிய இல்லற வாழ்வை அமைத்து கொடுத்தார்.
தனது வாழ்வின் இறுதி ஒன்பது வருடங்களை தனது கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் எல்லை இல்லா மகிழ்ச்சியுடன் லண்டனில் வாழ்ந்து வந்தார்.

இக்கால கட்டத்தில் திடீரென ஏற்பட்ட மார்புவலி காரணமாக St. George's Hospital ல் அனுமதிப்பட்டார். அங்கு அவரிற்கு மேற்கொள்ளப்பட்ட இருதய அறுவைச்சிகிச்சை பயனளிக்காமல் போகவே தனது ஐம்பத்தைந்தாவது வயதில் எம்மையெல்லாம் நிரந்தர சோகத்தில் ஆழ்த்தி இறையடி சேர்ந்தார்.

*எமக்கு உயிர் தந்த எங்கள் உயிர் அம்மாவின்*
*ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்!*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*



# எங்கள் உயிரான அம்மாவிற்கு!

நீங்கள் சிவனடி சேர்ந்திருப்பீர்கள் என்பதனால் இம்மடலை சிவன் பாதம் சேர்க்கின்றோம். எங்கள் வேதனையின் ஒரு துளியை உங்களிற்கு இம்மடல் மூலம் அனுப்புகின்றோம்.

அம்மா! உங்களை நாம் அப்படி அழைத்து எப்படியெல்லாம் சந்தோஷப்படுவோம். அம்மா என்ற சொல்லில் இந்த உலகமே அடங்குமே! இவ்வுலகில் உங்களிற்கு ஈடிணையாக யார் உள்ளார்கள்? ஒவ்வொரு கணமும் உங்கள் நினைப்பு எங்களை வாட்டுகிறது. நீங்கள் எங்களோடு இருக்க எப்படியெல்லாம் காலனோடு போராடினீர்கள் என்று எங்களிற்கு தெரியும், என்ன செய்வோம்! விதி வென்றுவிட்டதே!

அம்மா ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் உங்களோடு வாழ்ந்த இனிமையான அந்த நாட்களையெல்லாம் மீட்டு வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். ஐந்து பிள்ளைகளோடு அப்பாவையும் உங்கள் பிள்ளை போல் பேணி வாழ்ந்தீர்களே. இன்று அவர் படும் வேதனையை எப்படிச் சொல்வது. எத்தனை பேர் ஆறுதல் கூறினாலும் உங்கள் இழப்பை யாராலும் ஈடு செய்ய முடியாது.

உங்களைப் போல் ஒரு அன்பானத் தாயை யாரும் கண்டிருக்க மாட்டார்கள். நீங்கள் உங்களுக்காக வாழ்ந்ததே இல்லையம்மா. உங்களுக்கு எது விருப்பம் என்று கூட தெரியாதம்மா. ஏன் என்றால் எங்கள் எல்லோரினதும் விருப்பம் தானே உங்கள் விருப்பமாக வாழ்ந்தீர்கள்.

எப்போதாவது உங்களுக்காக கடவுளை வேண்டி வழிபட்டீர்களா? எல்லா வேண்டுதலும் எங்களிற்காகத்தானே. அதுதான் கடவுள் எங்களை எல்லாம் நன்றாக வாழவைத்து உங்களை தன்னிடம் அழைத்துவிட்டான் போலும். எப்படிஎல்லாம் கடவுளை வேண்டினோம் தெரியுமா? "எங்கள் அம்மாவை எங்களுக்குத் தந்துவிடு!" என்று எங்களை வருத்தி வேண்டினோமே! நாங்கள் தோற்று விட்டோம் அம்மா. அம்மா இந்த உலகமே உங்கள் இழப்பில் வெறுத்துவிட்டது.

உங்கள் பேரப்பிள்ளைகளை எப்படியெல்லாம் வளர்த்தீர்கள். என்றைக்கும் குஞ்சுகள் என்றுதானே கூப்பிடுவீர்கள். நாங்கள் அவர்களிற்கு பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் எம்மைவிட நேசிப்பது உங்களைத்தானே. அன்று நாம் எங்கள் அம்மம்மாவின்

அரவணைப்பு இல்லாமல் வாழ்ந்தோம், இன்று எங்கள் பிள்ளைகளிற்கும் அதே நிலைதானா?

அம்மா எங்களிற்கு வாழ்க்கையில் பொறுமை எவ்வளவு முக்கியம் என்பதை சொல்லிச் சொல்லி வளர்த்தீர்கள். உங்கள் இழப்பையும் பொறுமையுடன் காக்க வைத்தீர்களா? முடியவில்லையம்மா! எங்கள் நெஞ்சே வெடித்து விடும் போலுள்ளது.

ஒரு நிமிடம் யோசியுங்கள் அம்மா, உங்களை இனி நாம் பார்ப்போமா? உங்கள் இனிய வார்த்தைகளை இனி கேட்போமா? உங்கள் தொடுகையை நாங்கள் உணருவோமா? உங்கள் மடியில் தலை வைத்துப் படுப்போமா? ஏன் அம்மா நீங்கள் கும்பிட்ட கடவுள் எங்களை கைவிட்டான்???

அம்மா நாங்கள் அழுதால் நீங்கள் தாங்க மாட்டீர்கள். அம்மா எங்களை மன்னித்து விடுங்கள். எங்களால் உங்களை இழந்த வேதனையை கட்டுப்படுத்த முடியவில்லை. நாங்கள் உங்களிடம் வரும்வரை உங்களை எண்ணி அழுது கொண்டுதான் இருப்போம். உங்கள் அன்பையும் பாசத்தையும் யாராலும் ஈடு செய்யமுடியாது. உங்களால் மட்டும்தான் முடியும். அதற்கு நீங்கள் வரவேண்டும். வருவீர்களா???

உங்கள் நினைவில் வாடும்

பிள்ளைகள்



# காரியசித்திமாலை

## காசிபமாமுனி அருளியது

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும்
எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி
இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்புகூரத் தொழுகின்றாம்.

உலகமுழுதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள் எவன்அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன்அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றாம்

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி
கருமம் எவனால் முடியும்அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றாம்

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்
கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி
அறிவிப்பான் எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம்.

செய்யும் வினை முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக்
கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம்

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன்யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன்
எண்குணன் எவனப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம்.

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான்
எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின் மூன்றாய்
நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான்
எவன் வானிடை ஒன்றாய்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற்
சரணம் அடைகின்றாம்.

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
மாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றாம்.

உ
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர்போயகலப்
பொன்னிற் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவுனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவியறுகக் நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம் ஒருமூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடற் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே.

# மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாசகம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே— எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தையடி போற்றி
தேசனடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டுணர்வார் தன்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*****

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதி அணி சூலினி மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி செளந்தரியே!
கங்கண பாணியன் களிமுகம் கண்ட நல் கற்பகக் காமினியே!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

கான் உறுமலர் எனக் கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்!
தான் உறு தவஒளி தார்ஒளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்!
மான் உறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

சங்கரி செளந்தரி சதுர் முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே!
பொங்கு அரிமாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே!
எம் குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்த நல் துர்க்கையளே!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

தண தண தந்தண தவில் ஒளி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்!
கண கண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்!
பண பண பம்பண பறைஒலி கூவிடப் பண்மணி நீ வருவாய்!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக் கொடுத்த நல் குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல் சக்தி எனும் மாயே!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

எண்ணியபடி நீ அருளிட வருவாய் எம்குல தேவியளே!
பண்ணிய செயலில் பலனது நலமாய்ப் பல்கிடஅருளிடுவாய்!
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்!
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்!
படர் தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

ஜெய ஜெய பாலா! சாமுண்டேஸ்வரி ஜெய! ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய துர்க்கா! ஸ்ரீபரமேச்வரி ஜெய! ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய ஜெயந்தி! மங்கள காளி ஜெய! ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய சங்கரி! கெளரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

ஓம் சரவணபவ!

அருள்திரு தேவராயசுவாமிகள் அருளிய

# கந்தசஷ்டி கவசம்

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரி ரிரிரி
விண பவ சரஹண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்

உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறு இடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்

பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்தங்களுடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புந்நரி நாயும்
எலியுங் கரடியும் இனித் தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிரங்கு குடல்விப்பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை

கடுவன் படுவான் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொர்ணமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே

பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்த தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்குரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தெழுவர்க் குவந்து அமுதளித்த
குருபரன் பழநிக்குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்ய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நடனம் இடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.

# ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை காப்பு

ஆக்கும் தொழில் ஐந்து அரன் ஆற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கண நாயக வாரணமே.

கற்றும் தெளியார் காடே கதியாய்
  கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெரியார் நிலை எண்ணில் அவம்
  பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
  பகைவர்க்கு எமனாக எடுத்தவளே
வற்றாத அருள்சுனை வருவாய்
  மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

மூலக் கனலே சரணம் சரணம்
  முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
  குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
  நினைவற்று எளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
  மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

முத்தேவரும் முத்தொழில் ஆற்றிடவே
  முன்னின்று அருளும் முதல்வி சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
  வேதாந்த நிவாஸினியே சரணம் சரணம்
தத்தேறிய நான் தநயன் தாய்நீ
  சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு தத்திக்கு இணைவாழ்வு உடையேன்
  மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

அந்தி மயங்கிய வான விதானம்
  அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
விந்தை நிரம்ப வளம் பொழி பாரோர்
  தேன் பொழிலாம் இது செய்தவள் யாரோ
எந்த இடத்தும் மனத்தும் இருப்பாள்
  எண்ணுபவருக்கு அருள் எண்ணம் மிகுந்தாள்
மந்திர வேதமயப் பொருள் ஆனாள்
  மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

காணக் கிடையா கனியானவளே
  கருதக் கிடையாக் கலையானவளே
பூணக் கிடையாப் பொலிவானவளே

புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதி ஜதி லயமே இசையே சரணம்
அர ஹர சிவ என்று அடியவர் குழும
அவர் அருள் பெற அருள் அமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெய சக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர் வான் நிலவே
குழல் யாழ் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விகாஸ வியாசினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணீ
சாம்பவி சந்திர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்கிருத பூரணி
அம்ருத சொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

வலை ஒத்த வினை கலை ஒத்த மனம்
மருளப் பறையாறு ஒவி ஒத்த விதால்
நிலையற்று எளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற்று அசைவற்று அநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எலாம் அடைவார்
நவரத்தினமாய் திகழ்வார் அவரே.

## ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அவர்கள் இயற்றிய

# ராகுகால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மை யானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடைமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்வவள்
துறையு மானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நம்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் திருசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமலத் துர்க்கையே
கருணைத் துர்க்கையே வீரக் கனத் துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்புத் துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

# ஹாரதி



ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடி பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா ஓம் ஸ்ரீஜெய

திருப்தியிம் இன்பமும் வாழ்வில் துலங்க தேவையெல்லாம்
அடைய(மறைய) அம்மம்மா தேவையெல்லாம் அடைய
(மறைய)
பக்தி பெருகிட பாடி உருகிட பணிப்பாய்
அன்பிலெம்மை ஓம் ஸ்ரீ ஜெய ....

இரண்டுகள் போக மூன்றுகள் அகல ஈஸ்வரி
வரமருள்வாய் அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்!
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய !

காசினியெங்கும் வேற்றுமைபோக கருத்தினில்
அன்பருள்வாய் அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்!
தேசுடன் வாழ காட்டடி காக்ஷி தேவியுன்
அடைக்கலமே ஓம் ஸ்ரீ ஜெய ....

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞான(ல)த்திரக்கமைதியைத்தா ஓம்ஸ்ரீ ஜெய

ஓம் கணபதி ஸாயி ஷண்முக நாதா ஓம்
த்ரிகுணாதீத க்ருஷ்ண
ஓம் ஸ்ரீராம மஹாதேவ சம்போ - ஓம் ஜெய ஜெகத்ஜெனனி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி.

# காயத்ரி மந்திரங்கள்

**விநாயகர்:**
ஓம் ஏகதந்தாய விதம்ஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்


**சிவன்:**
ஓம் தத்புருஷாய வித்மஹே
மஹா தேவாய தீமஹி
தந்நோ ருத்ர ப்ரசோதயாத்

**அம்பாள்:**
**(துர்க்கை)**
ஓம் காத்யாய நாய வித்மஹே
கந்யகுமாரி தீமஹி
தந்நோ துர்கிப்ரசோதயாத்

**முருகன்:**
ஓம் தத் புருஷாய வித்மஹே
மஹா ஸேநாய தீமஹி
தந்நோ ஷண்முக ப்ரசோதயாத்

**ஸ்ரீ காயத்திரி:**
ஓம் பூர்வு வஸ்ஸீவ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நஃப்ர சோத யாத்

**குருசாயி பாபா:**
ஓம் ஸாயீ ச்வராய வித்மஹே
ஸத்ய தேவாய தீமஹி
தன்ன சர்வப்ரசோத யாத்
ஓம் ஸாயிராமாய வித்மஹே
ஆத்மாராமாய தீமஹி
தந்நோ பாபா ப்ரசோதயாத்



# அன்பு மனைவியிற்கு

கூடி வாழ்ந்த வாழ்வு மறந்து
குடியிருந்த கோயில் மறந்து
கை பிடித்த என்னை மறந்து
பாதியில் பிரிந்ததும் ஏன்?

ஐந்தோடு ஆறாய்
பிள்ளையாய் என்னையும்
பேணிக் காத்தவளே:
கற்பனைகள் பல சுமந்து
பல காலம் வாழ நினைத்தோமே
இன்று வாழ்வை கற்பனையாக்கி
காவியமாக மாறியதும ஏனோ!

பூவையும் பொட்டையும் நீ சுமந்து
துன்பத்தையும் துயரையும்
சுமக்க வைத்த என் உயிரே
என்னை மறந்து எங்கே சென்றாய்?

கூடி உறவுகளோடு
குதூகலிக்க நினைத்தாய்
நினைத்ததை முடித்தாய்
அது துயரத்தின் முடிவிலா?



# அன்பான அம்மா,

எங்கே சென்றாய்? ஏன் சென்றாய்
சொல்லாமல் சென்றாயே!
செல்லும் வழி தெரிந்திருந்தால்
சேர்ந்து நாமும் வந்திருப்போம்.
அன்பின்றி அடைக்கலமின்றி
அவனியில் தவிக்கின்றோம்
கனவிலும் நினைவிலும் - உன்னை
காணாது தவிக்கும் எம்மை
கட்டியணைக்க வருவாயா?

கருவை உருவாக்கி
உருவிற்கு உயிர்கொடுத்து
உயிரிற்கு உறவை கொடுத்த தாயே!
நீ தூங்கி நாம் கண்டதில்லை
துடித்த உன் இதயத்தை கேட்டதில்லை
இன்று...
முடிவில்லா உன் தூக்கத்தையும்
முடியும் உன் இதயதுடிப்பையும்
கேட்டுமே துடித்தோமே!
என்ன கொடுமையம்மா...

விதியின் சதி இதுவோ
வேதனைதான் வாழ்வின் முடிவோ
வாழ்ந்தது போதுமென்றா
வையகம் விட்டகன்றாய்!

# எங்கள் உயிர் அம்மம்மா / அப்பம்மா

அரவணைக்க உன் கை வேண்டும்

ஆறுதலிற்கு உன் மடி வேண்டும்

இவ்வுலகில் உன் வழிகாட்டல் வேண்டும்

ஈடில்லா உன் இதயம் வேண்டும்

உன்னோடும் வாழும் உவகையும் வேண்டும்

ஊட்டி வளர்த்த உன் அன்பு வேண்டும்

எல்லோரும் போற்றும் உன் பண்பு வேண்டும்

ஏங்கும் நெஞ்சங்களை தாங்கும் உன் மனம் வேண்டும்

ஐயமில்லா உன் ஆளுமை வேண்டும்

ஒன்றாக வாழ்ந்த வாழ்வும் வேண்டும்


ஓடி விளையாட நீயும் வேண்டும்

ஔவைபோல் அறிவுரை சொல்ல நீ வேண்டும்

*உன்மடி தேடுகின்றோம்!*
*ஓடி நீயும் வந்திடு அம்மம்மா!!*



## அமரர் திருமதி. நவரத்தினம் கமலவேணி
## அவர்களின் வம்சாவழித் தோன்றல்



# நன்றி நவிலல்

இறைவனடி சேர்ந்த எனது அன்புத் தாயின் இறுதிச் சடங்குகளின் போது நேரில் கலந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மலர் வளையங்கள் சாத்தியும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்து ஆறுதல் அளித்த உற்றார் உறவினர் நண்பர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பாக எமது தாயார் வைத்தியசாலையில் இருந்த போது எம்மோடு கூட இருந்து எமக்கு மன ஆறுதல் அளித்தவர்களுக்கும், எமது தாயாரின் உடல் நிலை பற்றி விபரித்த எமது உறவுகளான வைத்தியர்களிற்கும் எமது விஷேட நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.ஷ

குறுகிய நேரத்தில் கண்ணீர் அஞ்சலி, அந்தியேட்டி, நினைவுமலர்களை சிறந்த முறையில் அச்சுப்பதித்துத் தந்த வாசன் பதிப்பகத்திற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று நடைபெறும் 31-ம் நாள் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொண்டு எமது தாயாரின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கும் அனைவர்க்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**



# முக்கிய நாட்கள்

| | |
|---|---|
| 01-01-2006 | புது வருடப் பிறப்பு |
| 14-01-2006 | தைப்பொங்கல் திருநாள் |
| 31-01-2006 | ஹஜ்ஜுப் பெருநாள் |
| 11-02-2006 | தைப்பூசம் |
| 26-02-2006 | மகா சிவராத்திரி |
| 14-04-2006 | பெரிய வெள்ளி |
| 14-04-2006 | தமிழ்ப் புதுவருடப் பிறப்பு (தாரண வருடம்) |
| 16-04-2006 | உயிர்த்த ஞாயிறு |
| 22-04-2005 | நபிகள் நாயகம் பிறந்த நாள் |
| 12-05-2006 | சித்திரா பூரணை விரதம் |
| 01-05-2006 | தொழிலாளர் நாள் (மே தினம்) |
| 17-07-2006 | ஆடிப்பிறப்பு |
| 24-07-2006 | ஆடி அமாவாசை |
| 26-09-2006 | நவராத்திரி ஆரம்பம் |
| 02-10-2006 | விஜயதசமி |
| 20-10-2006 | தீபாவளித் திருநாள் |
| 24-10-2006 | றம்ழான் பெருநாள் |
| 22-10-2006 | ஸ்கந்த ஷஷ்டி விரதம் |
| 27-11-2006 | தேசிய மாவீரர் நாள் |
| 04-12-2006 | கார்த்திகை விளக்கீடு |
| 25-12-2006 | திருவெம்பாவை விரதம் ஆரம்பம் |
| 25-12-2006 | நத்தார் பண்டிகை |

# 2006

## JANUARY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | **2** | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## FEBRUARY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

## MARCH

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## APRIL

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | **14** | 15 |
| 16 | **17** | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## MAY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | **1** | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | **29** | 30 | 31 | | | |

## JUNE

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

## JULY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## AUGUST

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | **28** | 29 | 30 | 31 | | |

## SEPTEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## OCTOBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## NOVEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | **25** | **26** | 27 | 28 | 29 | 30 |

## Bank & Public Holidays

**New Year** ................................Jan 1
**Good Friday** ........................Apr 14
**Easter Monday** ....................Apr 17
**Bank Holiday** .......................May 1
**Bank Holiday** ....................May 29
**Bank Holiday** ......................Aug 28
**Christmas day** ......................Dec 25
**Boxing day** ...........................Dec 26

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இ[illegible]கே எடுக்கப்பட்டது.
[illegible]கொடுத்தாயோ,
[illegible]டுக்கப்பட்டது.
[illegible]டையதோ
[illegible]ருவருடையதாகிறது.
[illegible]வறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும் "

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

ஹரே கிருஷ்ணா! ஹரே ராமா!

